## 52

# மறுரூபமாக்கப்பட்ட வாழ்வு

## (12:1, 2)

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் எட்டு அதிகாரங்களில், நாம் நமது இரட்சிப்பின் அடிப்படையின் மீதான பவுலின் விளக்கங்களைப் படித்தோம், மற்றும் மூன்று அதிகாரங்களில் நாம் "யூதத்துவப் பிரச்சனை"யை ஆழ்ந்து சிந்தித்தோம். கடைசி அதிகாரங்கள், அப்போஸ்தலர் கூறிய எல்லாவற்றின் நடைமுறைப் பயன்பாட்டின்மீது மையங்கொண்டுள்ளன. (இப்புத்தகத்தின் வேறொரு இடத்திலுள்ள ரோமருக்கு எழுதிய நிருபத்தின் வரைகுறிப்பைக் காணவும்.) பவுல், இறையியல் சிந்தனையின் மிக உயர்ந்த உயரங்களுக்குப் பறக்க முடிந்தது, ஆனால் அவர் எப்போதுமே தமது பாதங்களை - நாம் வாழ்கிற - பூமியின்மீது உறுதியாக பதிப்பதுடன் முடித்தார். அவர் நம்பிக்கை மற்றும் நடத்தை ஆகிய இரண்டின்மீதும் அக்கறை கொண்டிருந்தார்.[1] அவர் கற்றுக்கொள்ளுதலில் மாத்திரமல்ல, ஆனால் வாழ்வதன்மீதும் - உபதேசத்தின் மீது மாத்திரமல்ல, ஆனால் கடமையின்மீதும் - கவனம் குவித்தார்.[2] R. C. பெல் என்பவர், ரோமருக்கு எழுதிய நிருபத்தின் முந்திய அதிகாரங்களை "வேர்" என்றும் பிந்திய அதிகாரங்களை "கனி" என்றும் அழைத்தார்.[3]

நடைமுறைப்பகுதியானது வேதவசனங்களின் மாபெரும் அதிகாரங்களில் ஒன்றுடன் தொடங்குகிறது: ரோமருக்கு எழுதிய நிருபம் 12ம் அதிகாரம். முன்னதாக நான் ரோமருக்கு எழுதிய நிருபத்தின் 8ம் அதிகாரம், வேதாகமத்தில் எனக்கு மிகவும் பிரியமான அதிகாரம் என்று குறிப்பிட்டிருந்தேன். ரோமர் 12ம் அதிகாரம் எனது தாய்க்குப் பிரியமான அதிகாரமாகும். அவர்கள் வாழ்வின் கடைசி மாதங்களில், ஆராதனைக்காக சபைகூடிவரும் இடத் திற்குச் செல்ல உடல்ரீதியாக அவர்களால் சிலவேளைகளில் இயலாதிருந்தது. அவ்வப்போது, நான் எனது தந்தை ஆராதனை ஊழியத்தில் கலந்துகொள்ளக் கூடும்படிக்கு, ஞாயிற்றுக்கிழமை காலைவேளைகளில் எனது தாயுடன் வீட்டில் இருப்பதுண்டு. எனது தாயும் நானும் ஒரு வழிபாட்டை நடத்திக் கர்த்தருடைய பந்தியில் ஒன்றாகக் கலந்துகொள்வோம். அந்த வழிபாட்டு வேளையில், நான் எந்த வசனப்பகுதியை வாசிக்க வேண்டும் என்று அவர்களிடம் கேட்பேன், அவர்களும் எவ்வித மாறுபாடுமின்றி, "ரோமர் 12" என்று பதில் அளிப்பார்கள். ரோமர் 12க்கான தனது அன்பில் எனது தாய் மாத்திரம் தனியாக இருக்க வில்லை. அது பலருக்குப் பிரியமானதாக உள்ளது. J. D. தாமஸ் என்பவர், "நீங்கள் வேதாகமத்தின் வேறு எவ்விடத்திலும் கிறிஸ்தவ வாழ்வு பற்றி இதைவிடச் சிறந்த தொகுப்புரை எதையும் காணமாட்டீர்கள்" என்று கூறினார்.[4]

இந்தப் பாடம் 12:1, 2ம் வசனங்களின் மீதானதாக உள்ளது. இவ்வசனங்கள், 12 முதல் 16 வரையிலான அதிகாரங்களின் புத்திமதிகளுக்கு மேடை அமைக்கின்றன. கிறிஸ்தவர்கள் எதைச் செய்யும்படி ரோமர் 12:1, 2ல் பவுல்

*வேண்டிக் கொண்டாரோ, அதை நாம் செய்தால், 12:3-16:27ல் காணப்படும் எந்த ஒரு கட்டளையையும் நிறைவேற்றுவதில் நாம் சிறிதளவே சிரமம் கொண்டிருப் போம்.*

## *புறம்பாக மறுரூபமாகுதல் (12:1)*

***பவுலின் அணுகுமுறை (வசனம் 1அ-இ)***

*நமது வேதபாட வசனப்பகுதி "அப்படியிருக்க" (oun) என்று தொடங்குகிறது. பவுல் ஒரு புதிய பகுதியை "அப்படியிருக்க" (அல்லது "ஆதலால்") என்ற வார்த்தையைக் கொண்டு அடிக்கடி தொடங்கினார் (காண்க 1:24; 2:1; 5:1, 12; 6:12; 7:4, 13; 8:1), இது அவர் சற்றுமுன்னர் முடித்திருந்த சிந்தனைகளுடன் அவர்கூற இருந்தவற்றை இணைக்கும் வகையில் இருந்தது. 12:1ல் உள்ள "அப்படியிருக்க" என்பது ரோமருக்கு எழுதிய நிருபத்தின் கடைசிப்பகுதியி லுள்ள நடைமுறைப் பயன்பாட்டை, அந்த நிருபத்தின் முதல் பகுதியிலுள்ள போதனையுடன் பிணைக்கிறது. கிறிஸ்தவர்கள் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுகின்றனர் என்று பவுல் வலியுறுத்தியிருந்தார். இவ்விடத்தில் அவர் விசுவாசத்தி னால் நீதிமானாக்கப்பட்ட ஒரு நபர் எவ்வாறு வாழ வேண்டும் என்று விவரித்தார்.*

*பவுல், "அப்படியிருக்க ... உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று கூறினார் (12:1).* KJV *வேதாகமத்தில்,* "I beseech you" *என்றுள்ளது.* NEB *வேதாக மத்தில்,* "I implore you" *என்றுள்ளது. பல மொழிபெயர்ப்புகளில்,* "I beg you" *என்றுள்ளது* (Phillips; McCord; JB). *பவுல் தமது வாசகர்களுக்குக் கட்டளை யிடுவதற்குப் பதிலாக, அவர்களை வேண்டிக்கொண்டார், இறைஞ்சினார், மன்றாடினார். கெஞ்சினார். ஒருவேளை தேவன் நிர்ப்பந்தமான ஒரு பலியை விரும்புவதில்லை, ஆனால் பிரியமுள்ள பலியையே விரும்புகிறார் என்பதால் அவர் [பவுல்] இப்படிச் செய்தார்.*

*"வேண்டிக்கொள்ளுகிறேன்" என்பது parakaleo என்பதன் மொழிபெயர்ப் பாக உள்ளது, இது "ஒருவரின் பக்கம் வரும்படி அழைத்தல்" என்ற நேரடியான அர்த்தம் கொண்டுள்ளது[5] (kaleo ["அழைக்க"] கூட்டல் para ["பக்கமாக"]). ஒரு நண்பரை ஒருவர் தம் பக்கமாக அழைத்தல், ஒருவேளை அவரது தோளின்மீது கைபோட்டு, அவரது கண்களில் உற்றுநோக்கி, "சகோதரே, இதைச் செய்யும்படி நான் என் முழு பலத்துடன் உங்களை உற்சாகப்படுத்துகிறேன்" என்று கூறி அழைத்தல் என்பது இதன் ஒப்புவமையாக உள்ளது. டேல் ஹார்ட்மேன் என்பவர், "வலியுறுத்தத்திற்காகப் பவுல் அடிக்கோடு இடுதலைப் பயன்படுத்தி யிருந்தால், அவர் இவ்வார்த்தைகள் மற்றும் இதைத் தொடர்ந்துள்ளவற்றை அடிக்கோடிட்டு இருப்பார்" என்று விளக்கம் அளித்தார்.[6] ரோமருக்கு எழுதிய நிருபத்தை ஒருவர் வாசிப்பதின் விளைவாக அவர் என்ன* செய்ய வேண்டும் *என்பதை அப்போஸ்தலர் வெளிப்படுத்த இருந்தார்.*

*பவுல் தமது இதமான, தனிப்பட்ட அணுகுமுறையை "சகோதரரே" என்ற வார்த்தையுடன் தொடர்ந்தார் (வசனம் 1அ). இவ்விடத்திலிருந்து இந்த நிருபத்தின் முடிவு வரையிலும் அவர், யூதரோ அல்லது புறஜாதியாரோ, யாராயிருப்பினும், ரோமாபுரியிலிருந்த தமது ஆவிக்குரிய சகோதர சகோதரிகள்*

*எல்லாரையும்* விளித்துக் குறிப்பிட்டார்.

பவுல் தமது சகோதர சகோதரிகளை, "தேவனுடைய இரக்கங்களை[7] [இது *oiktirmos* என்ற வார்த்தையிலிருந்து வந்துள்ளது][8] முன்னிட்டு" வேண்டிக்கொண்டார் (வசனம் 1இ). "தேவனுடைய இரக்கங்கள்" என்பவை முந்திய அதிகாரங்களில் முன் அமைக்கப்பட்ட இரக்கத்தின் பல சொல்விளக்கங்களாக உள்ளன: நம்மை இரட்சிப்பதில் தேவனுடைய இரக்கம், கிறிஸ்தவ வாழ்வை வாழ நமக்கு உதவுவதில் அவருடைய இரக்கம், இன்னும் பிற. அவரது இரக்கங்களின் "விளைவாக" (NIV), அவர் செய்யும்படி நம்மிடம் கேட்டுக்கொள்ளும் எதையும் செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும். "அவர் உங்களுக்குச் செய்துள்ளதை நீங்கள் நினைத்துப் பார்க்கும்போது, இது கேட்டுக்கொள்ள மிகவும் அதிகமாயிருக்கிறதா?" (NLT).

**பவுலின் வேண்டுகோள் (வசனம் 1ஈ)**

பவுல், கிறிஸ்துவுக்குள்ளிருந்த தமது சகோதரர்களும் சகோதரிகளும் எதைச் செய்யும்படி வேண்டிக்கொண்டார்? முதலில் அவர்கள், "தங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று" அவர்களிடத்தில் அவர் கேட்டுக்கொண்டார் (வசனம் 1ஆ). இவ்வார்த்தைகள் நம்மில் பலரைக் காட்டிலும் முதல் நூற்றாண்டு வாசகர்களுக்கு அதிகமான அர்த்தம் கொண்டிருந்தன. பல நூற்றாண்டுகளாக, யூதர்கள் தேவலாயத்தில் மிருக பலிகளைச் செலுத்தியிருந்தனர். புறதெய்வ ஆராதனையும்கூட பலிகள்மீது மையங்கொண்டிருந்தது. கிறிஸ்தவர்களுக்கு - குறிப்பாக யூத மதத்திலிருந்து கிறிஸ்தவர்களானவர்களுக்கு - பவுலின் அறைகூவல், மிருகபலிகளுடனான ஒரு ஒப்பீட்டையும் வேறுபடுத்தி ஒப்பிடுதலையும் உள்ளடக்குகிறது. இந்த ஆச்சரியமான அறைகூவலை நாம் விவரமாகக் கண்ணோக்குவோமாக:

- *"உங்கள் சரீரங்களை"* - நீங்கள் *உங்களையே* ஒப்புக்கொடுக்க வேண்டும். தேவாலயத்திற்குள் எந்த மிருகமும் வந்து, "இதோ நான் இருக்கிறேன்! என்னைப் பலியிடுங்கள்!" என்று ஒருபோதும் கூறியதில்லை. இருப்பினும், அதுவே செயல்விளைவில் ஒரு கிறிஸ்தவர் செய்வதாக உள்ளது. இவ்வகையில், ஒரு கிறிஸ்தவர் ஆசாரியராகவும் பலிப்பொருளாகவும் இருக்கிறார். '
- "உங்கள் *சரீரங்களை*": மிருகங்களைப் பலியிடுவதற்குப் பதிலாகக் கிறிஸ்தவர்கள் தங்கள் சரீரங்களை, தங்கள் வாழ்வை, தேவனுக்குப் பலியாகச் செலுத்த வேண்டும்.
- *"பரிசுத்தமும்"* - கர்த்தருடைய பலிசெலுத்தப்பட்ட பலிகள் பரிசுத்தமாக (அவருக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டவைகளாக) மற்றும் பழுதற்றவைகளாக (காண்க - லேவியராகமம் 1:3; 1 பேதுரு 1:19; மல்கியா 1:8) இருக்க வேண்டியிருந்தன. கிறிஸ்தவர்கள் எப்போதுமே தங்களிடத்திலுள்ள மிகச்சிறந்தவற்றைத் தேவனுக்குப் பலிசெலுத்த வேண்டும்.
- "தேவனுக்குப் பிரியமுமான" - "பிரியமுமான" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*euarestos* என்ற) வார்த்தை "நன்கு - பிரியமான" (*eu* ["நன்கு"] கூட்டல் *arestos* ["பிரியமான"]) என்று அர்த்தப்

படுகிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில், தேவன் கட்டளை யிட்டபடி மிருக பலிகள் செலுத்தப்பட்டபோது, அவற்றின் புகையானது "கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனமாக" எழும்பிற்று (எண்ணாகமம் 15:3; NIV). அதுபோலவே, நாம் கலந்துரையாடிக் கொண்டுள்ள ஆவிக்குரிய பலியினுடைய வகை யானது தேவனுக்குப் பிரியமானதாகவும் அவரால் ஏற்றுக்கொள்ளப் படுவதாகவும் உள்ளது.

- "ஜீவ" - இறந்த மிருகங்களைப் பலியிடுவதற்குப் பதிலாகக் கிறிஸ்தவர்கள் ஜீவபலியைச் செலுத்த வேண்டியுள்ளது.[9]
- "பலியாக" - "தொடக்க நாட்களின் மிருகபலிகள் கிறிஸ்துவின் சுயபலியினால் என்றென்றைக்குமாக நடைமுறையில் இல்லாத வாறாக்கப்பட்டன, ஆனால் கீழ்ப்படிதலுள்ள இருதயங்களினால் அளிக்கப்படும் ஆராதனைக்கு எப்போதுமே இடம் உள்ளது."[10] கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவ னுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" என்று எழுதினார் (1 பேதுரு 2:5). எபிரெயருக்கு நிருபத்தை எழுதி யவர், இயேசுவைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் பின்வரும் அறைகூவலைக் கொடுத்தார்: "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூல மாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம். அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" (எபிரெயர் 13:15, 16).
- "ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று" - "ஒப்புக்கொடுத்தல்" என்பது *paristemi* என்பதிலிருந்து வருகிறது மற்றும் இது "அருகாக வைத்தல்" என்ற அடிப்படை அர்த்தம் தருகிறது (*histemi* ["அமைக்க"] கூட்டல் *para* ["அருகாக"]). இது கர்த்தருக்கு முன்பாக ஒரு பலியை வைத்தலைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. இது லேவியத்துவ குற்றநிவாரண மற்றும் பலிகளை முன்வைத்தலுக்கான நுட்பச் சொற்றொடராக இருந்தது."[11]

முன்னதாக ரோமருக்கு எழுதிய நிருபத்தில், பவுல் தமது வாசகர்களுக்கு அறைகூவல் விடுப்பதற்காக, "ஒப்புக்கொடுத்தல்" (*paristemi*) மற்றும் "சரீரம்" (*soma*) என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார்,

> நீங்கள் உங்கள் [*சரீரத்தின்*] அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு *ஒப்புக்கொடாமல்,* உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக் கிறவர்களாகத் தேவனுக்கு *ஒப்புக்கொடுத்து,* உங்கள் அவயவங்களை [உங்கள் *சரீரத்தின்* உறுப்புக்களை] நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு *ஒப்புக்கொடுங்கள்* (6:13; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

*பல எழுத்தாளர்களும் மொழிபெயர்ப்பாளர்களும், 12:1ல் உள்ள "சரீரங்கள்" என்ற வார்த்தையை, "நமது முழுமையும்" என்ற வகையில் விளக்கம் தருகின்றனர். நாம் நமது முழுமையையும் மற்றும் நமக்குள்ள யாவற்றையும் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம், ஆனால் பவுல் அனேகமாக, "சரீரங்கள்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தக் காரணம் ஒன்றைக் கொண்டிருக்கக்கூடும். பவுல் ரோமருக்கு எழுதிய நிருபம் முழுவதிலும் அவர் மாம்சப்பிரகாரமான உடலை ஆவிக்குரிய சாபங்களுக்குப் பிரதான ஆதாரமூலமாக வலியுறுத்தினார். மாம்ச பலவீனத்தினிமித்தமாக நாம் பாவப் பிரமாணத்திற்கு ஊழியம் செய்கிறோம் (7:25). நாமே தனித்துச் செயல்படுமாறு விடப்படுகையில், மாம்சப் பிரகாரமான உடலின் கீழ்நோக்கிய இழுத்தல், நம்மை மூழ்கடிக்க முடியும் மற்றும் அவ்வாறே செய்யும் (7:5, 18, 23, 24). இருப்பினும், 8ம் அதிகாரத்தில் பவுல், தேவனுடைய ஆவியின் மூலமாக நாம், "சரீரத்தின் செய்கைகளை" அழிக்க முடியும் என்று அறிவித்தார் (8:13). ஒரு காலத்தில் அநீதியின் கருவியாக இருந்த இந்த உடல், "பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக" ஒப்புக்கொடுக்கப்பட முடியும் என்று கூற இப்போது தயாரானார்.*

*கிறிஸ்தவமானது, மாம்ச உடலுக்குத் தக்க கண்ணியத்தையும் கனத்தையும் கொடுக்கிற ஒரு மதமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.[12] "கிரேக்கருக்கு ... மாம்ச உடலானது வெறுக்கத்தக்க மற்றும் வெட்கப்படவும் கூடியதான ஒரு சிறை வீடாக மாத்திரம் இருந்தது."[13] இதற்கு நேர்மாறாக, ஒரு கிறிஸ்தவர் தமது சரீரமானது "பரிசுத்த ஆவியானவருடைய ஆலயமாக" உள்ளது என்பதைப் புரிந்து கொள்கிறார் (1 கொரிந்தியர் 6:19). அவர் தமது சரீரத்தில் தேவனை மகிமைப் படுத்தி கிறிஸ்துவை உயர்த்த முடியும் (1 கொரிந்தியர் 6:20; பிலிப்பியர் 1:20).*

*சரீரத்தைத் தேவனுக்குப் பலியாக முன்வைப்பதில் அடங்கியுள்ளது என்ன?[14] எபிரெயர் 13:15, 16ம் வசனங்கள் தேவனைத் துதித்தல், நன்மை செய்தல் மற்றும் பகிர்ந்துகொள்ளுதல் ஆகியவற்றைப் பற்றிப் பேசுகையில் இதற்கு ஒரு குறிப்பைத் தருகின்றன. இவைகள் கர்த்தரைப் பிரியப் படுத்தும் பலிகளாக உள்ளன. நாம் நமது மாம்சப்பிரகாரமான திறமைகள் மற்றும் உறுப்புக்களைத் தேவனுடைய மகிமைக்கென்று பயன்படுத்துவதன் மூலம் நமது சரீரங்களை அவருக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கிறோம். ஜான் R. W. ஸ்டாட் என்பவர், நமது சரீரங்களைக் கர்த்தருக்கு அர்ப்பணித்தால் என்ன நடக்கும் என்பது பற்றி எழுதினார்:*

> *அப்போது நமது பாதங்கள் அவருடைய பாதைகளில் நடக்கும், நமது உதடுகள் சத்தியத்தைப் பேசி சுவிசேஷத்தைப் பரப்பும், நமது நாவுகள் குணமாக்குதலைக் கொண்டுவரும், நமது கைகள் விழுந்து போனவர்களைத் தூக்கிவிடும், மற்றும் ... சமைத்தல் மற்றும் சுத்தம் செய்தல், தட்டச்சு செய்தல் மற்றும் பழுதுநீக்குதல் போன்ற பல அன்றாடப் பணிகளை நிகழ்த்தும்; நமது கரங்கள் தனிமையிலும் அன்புகூரப்படாத நிலையிலும் இருப்பவர்களைத் தழுவிக்கொள்ளும்; நமது காதுகள் வருத்தத்தில் இருப்பவர்களின் கூக்குரலைக் கவனித்துக் கேட்கும், மற்றும் நமது கண்கள் தேவனைத் தாழ்மையுடனும் பொறுமையுடனும் கண்ணோக்கும்.[15]*

சரீரத்தைப் பலியாகச் செலுத்துதல் என்பது "உங்கள் ஆராதனையின் ஆவிக்குரிய ஊழியமாக" உள்ளது என்று பவுல் கூறினார் (ரோமர் 12:1, 2). இந்தச் சொற்றொடர் குழப்பமான இரு வார்த்தைகளைக் கொண்டுள்ளது. முதலாவது "ஆவிக்குரிய" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*logikos* என்ற) வார்த்தையாகும். *Logikos* என்பது *logos* ("வார்த்தை") என்பதிலிருந்து தரவழைக்கப்பட்டுள்ளது மற்றும் இது "logic" என்ற சொற்றொடருக்கு ஆதாரமூலமாக உள்ளது. W. E. வைன் என்பவர், *logikos* என்பது "பகுத்தறியும் துறைக்கு" உரியது என்றும் இது "ஏற்புடையது" அல்லது "பகுத்தறிவுக்கு உகந்தது" என்று அர்த்தப்படுகிறது என்றும் கூறினார்.[16] பெரும்பான்மையான தற்கால மொழிபெயர்ப் பாளர்கள், 1ம் வசனத்தில் "ஆவிக்குரிய" என்பதை விருப்பத் தேர்வாகக் கொள் கின்றனர் (தமிழ் வேதாகமத்தில் இது "புத்தியுள்ள" என்றுள்ளது), ஆனால் ஒரு மாறுபட்ட கிரேக்க பெயர் உரிச்சொல்லானது "ஆவிக்குரிய"/புத்தியுள்ள (*pneumatikos*) என்றே திட்டவட்டமாக அர்த்தப்படுத்துகிறது. "ஏற்புடைய" அல்லது "ஏற்கத்தக்க" என்பது இந்தக் குறிப்பிட்ட வசனத்தில் *logikos* என்பதற்கு அதிகம் இயல்பான தேர்வாகக் காணப்படுகிறது.

நமது சரீரங்களைத் தேவனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தல் என்பது எந்த வழியில் அல்லது வழிகளில் "புத்தியுள்ளதாக" இருக்கக் கூடும்? (1) இது தேவன் நமக்குச் செய்துள்ள யாவற்றிற்குமான ஒரு நியாயமான வேண்டுகோளாக உள்ளது. (2) நாம் நியாயமான மற்றும் பகுத்தறிவுள்ள ஜீவிகள் என்ற வகையில் தேவனுடைய அன்பிற்குப் பதில்செயல் செய்கிறோம். (3) நாம் இந்தப் பலியை ஒப்புக்கொடுக்கையில், அதை நாம் சிந்தையில் நிறைந்த, சிந்தனை நிறைந்த வகையில் செய்கிறோம்.

மேலே கொடுக்கப்பட்ட மூன்றாவது ஆலோசனை குறித்த விஷயத்தில், நாம் கர்த்தருக்கென்று செய்கிறது *எதுவாக இருப்பினும்* அது சிந்தித்தலை உள்ளடக்கி இருக்க வேண்டும். நாம் ஒருக்காலும் அவரை சடங்காச்சார, இயந்திரத்தனமான வகையில் சேவிக்கக் கூடாது. நான் டெக்ஸாஸிலுள்ள அபிலைன் கல்லூரியில் இருந்தபோது, அம்மாகாணத்தின் மேற்குப்பகுதியி லிருந்த, டெக்ஸாஸின் நாட் என்ற இடத்திலிருந்த சிறு சபைக்குழுமத்திற்குப் பிரசங்கித்து வந்தேன். ஞாயிற்றுக்கிழமை இரவுகளில் அபிலேனுக்கு நான் திரும்பிவரும் பயணம் எப்போதுமே மூன்று மணி நேரம் எடுத்துக்கொள்வதால், நான் தாமதமாகவே அபிலேனுக்குத் திரும்பிவருவதுண்டு, மற்றும் பொதுவாக நான் அவ்வேளைகளில் களைப்படைந்து போயிருப்பேன். ஒன்றுக்கு மேற்பட்ட வேளைகளில், நான் எனக்கு முன்வரும் நகரங்கள் எவை என்று நினைவு இல்லாம லேயே அவற்றைக் கடந்து எனது வாகனத்தை ஓட்டிவருவதுண்டு. தெளிவாய்ச் சிந்திக்க இயலாத நிலையில் வாகனத்தை ஓட்டுதல் என்பது அபாயகரமானது - மற்றும் தெளிவாய்ச் சிந்திக்க இயலாத நிலையில் தேவனைச் சேவித்தல் என்பது இருமடங்கு அபாயகரமானது. நாம் தேவனை ஆராதிக்கும்போது, நமது சிந்தனைகள் அவர்மீதும் மற்றும் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதின் மீதும் கவனம் குவித்திருக்க வேண்டும். கர்த்தருக்குச் செய்யும் *எல்லா* ஊழியத்திலும் இதே விஷயம் உண்மையாக உள்ளது.

NASB மொழிபெயர்ப்பு "service of worship" என்று மொழிபெயர்த் துள்ளது இரண்டாவது குழப்பமான வார்த்தையாக உள்ளது: *latreia. Latreia* என்பது *latreuein* என்ற வினைச்சொல்லின் பெயர்ச்சொல் வடிவ

மாக உள்ளது.

> தோற்றகாலத்தில் *latreuein* என்பது கூலிக்கு அல்லது ஊதியத்திற்குப் பணியாற்றுதலை அர்த்தப்படுத்தியது. ... பின்பு இது பொதுவாக *ஊழியம் செய்தலை* அர்த்தப்படுத்த வந்தது ... கடைசியாக இது *தேவர்களுக்கு ஊழியம் செய்தல்* என்பதற்குத் தனிப்பட்ட வகையில் பயன்படுத்தப்பட்ட சொல்லாயிருக்க வந்தது. வேதாகமத்தில் இது ஒருக்காலும் மனிதருக்கு ஊழியம் செய்தலை அர்த்தப்படுத்துவதில்லை; இது எப்போதுமே தேவனுக்கு ஊழியம் செய்தல் மற்றும் அவரை ஆராதித்தல் ஆகியவற்றிற்கே பயன்படுத்தப்பட்டுள்ளது.[17]

"ஊழியம்" மற்றும் "ஆராதனை" என்ற இரண்டுமே, *latreia* என்பதை மொழி பெயர்ப்பதற்கான சட்டப்பூர்வமான வழிகளாக உள்ளன. KJV உட்பட, பல மொழிபெயர்ப்புகள் "ஊழியம்" என்பதைக் கொண்டுள்ளன. NIVஐப் போன்ற மற்ற அநேக மொழிபெயர்ப்புகள் "ஆராதனை"யைக் கொண்டுள்ளன. NASB வேதாகமத்தில், இருவார்த்தைகளில் ஒன்றைத் தேர்ந்துகொள்வதற்குப் பதிலாக, "service of worship" என்று இருசொற்றொடர்களும் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன. முன்னதாக ரோமர் 9:4ல், NASB வேதாகமம் *latreia* என்ற வார்த்தையை "service" என்று தரவழைத்து இருந்தது, அத்துடன் அதற்கு முன்பாக "temple" என்ற வார்த்தையைக் கூடுதலாக இட்டது. (இது *leitourgia* என்ற உறவு வார்த்தையாக உள்ளது, இதிலிருந்தே நாம் இன்றைய நாட்களில் சில நாமகரணக்கூட்டங்களில் முன்னதாக வடிவமைக்கப்பட்ட ஆராதனைச் சடங்காச்சாரத்தைக் குறிக்கும் "liturgy" என்ற வார்த்தையைப் பெறுகிறோம்.)

*Latreia* என்ற வார்த்தையை விளக்கப்படுத்துவதில் எழுத்தாளர்கள் இறுதி எல்லைகளுக்குச் சென்றுள்ளனர்.சிலர், இவ்வார்த்தை தேவனுக்கு பொதுவான "சேவித்தலை" மாத்திரம் குறிக்கிறது மற்றும் இது ஆராதனையை அர்த்தப்படுத்து*வதில்லை* என்று வலியுறுத்தியுள்ளனர். ரோமர் 12:1ல் *latreia* என்ற வார்த்தையிலிருந்து ஆராதனையின் எந்தக் கூற்றையும் விலக்குதல் என்பது இறுதி முனையாகக் காணப்படுகிறது.[18] இவ்வசனத்தில் பவுல் சரீரத்தைத் தேவனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தல் பற்றிப் பேசினார்; அவர் ஆராதனைக்குரிய மொழி நடையைப் பயன்படுத்தினார்.

மற்றவர்கள், ரோமர் 12:1 வசனமானது "வாழ்வு முழுவதுமே ஆராதனையாக உள்ளது" என்று போதிக்கிறது என்பதாக யூகித்து, "ஆராதனை ஊழியம்" பற்றி உத்தரவாதமற்ற முடிவுகளை அடைந்துள்ளனர். எடுத்துக்காட்டாகச் சிலர், "வாழ்வு முழுவதுமே ஆராதனையாக உள்ளது" என்றால், ஆராதனைக்கு ஒன்றுகூட வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவுசெய்துள்ளனர். அந்த முடிவு எபிரெயர் 10:25ம் வசனத்திற்கு முரண்படுகிறது.

ஒருசிலர், ஒரு கிறிஸ்தவரின் அன்றாட வாழ்வில் ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையானது சரியானது என்றிருக்குமானால், ஆராதனைக்கென்று "சபை முழுவதும் கூடி வந்திருக்கும்போது" (1 கொரிந்தியர் 14:23), அதைச் செய்வது ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது என்று வலியுறுத்துகின்றனர். இந்த யூகமானது மிக மிகத் தவறானதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, பெண்கள் அன்றாடம் வீடு சந்தித்தல் மற்றும் [வேதாகமப்போதனை பற்றி] பேசுதல் என்பதில் தவறு எதுவும் இல்லை, ஆனால் அவர்கள் "சபைகளில் [சபை கூடுகை

களில்] ... பேசாமலிருக்கக்கடவர்கள்; ... ஸ்திரீகள் சபையிலே [சபை கூடுகையில்] பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே" (1 கொரிந்தியர் 14:34, 35). மீண்டுமாக, ஒரு தனிநபர் பொதுவான உணவின்போது காபி மற்றும் திராட்சரசம் ஆகியவற்றைப் பானங்களாக அருந்தலாம், ஆனால் கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடிக்கையில் திராட்சரசத்துடன் காபியை உள்ளடக்குதல் என்பது அந்த நினைவுகூரும் விருந்தை பரிசுத்தக் குலைச்சலாக்குதலாக இருக்கும். "ஒன்றுகூடி ஆராதனைச் செய்தல்" (சபையானது ஆராதிக்க ஒன்றுகூடுதல்) என்று நாம் அழைக்கிற விஷயத்திற்கும் தேவனைச் சேவிக்கும் நமது தனிப்பட்ட, சொந்தமான, தனியான ஊழியத்திற்குமிடையில் சில வித்தியாசங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ரோமர் 12:1ன் செய்தியானது மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு இறுதி எல்லைகளுக்குமிடையில் ஏதோ ஒரு இடத்தில் இருக்கிறது. நமது சரீரங்களை நாம் ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தல் என்பது "ஆவிக்குரிய [அல்லது புத்தியுள்ள] ஆராதனையாக" உள்ளது என்ற பவுலின் கூற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ள *வேண்டியது* என்ன? அனேகமாக, நாம் பின்வருபவை உட்படப் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கலாம்.

(1) "பரிசுத்தமான" மற்றும் "உலகப்பிரகாரமான" விஷயங்களுக்கிடையில் நாம் மிகவும் நுண்ணிய வித்தியாசத்தை ஏற்படுத்தக்கூடாது. பிள்ளைகளை "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும்" வளர்த்தல் (எபேசியர் 6:4) என்பது ஒரு பிரசங்கத்திற்குத் தயார் செய்தலைப் போன்றே பரிசுத்தமானதாக உள்ளது. வாரநாளின் வேலையொன்றைப் பற்றி உணர்வுடனிருத்தல், அதை "மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச்" செய்தல் (கொலோசெயர் 3:24) என்பது பக்திவிருத்திக்கென்று ஒரு பாடத்தை எழுதுதல் போன்றே பரிசுத்தமானதாக உள்ளது.

(2) நாம் எதைச் செய்தாலும், நாம் எப்போதுமே தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கிறோம் என்று நாம் அறிந்திருத்தல் அவசியமாக உள்ளது - மற்றும் நாம் அதற்கேற்பச் செயல்பட வேண்டும். ஒரு தனிநபர், ஞாயிற்றுக்கிழமையன்று இருப்பதிலிருந்து, திங்கள் கிழமை முதல் சனிக்கிழமை வரையிலும் மாறுபட்ட நபராக இருப்பாரென்றால், அவர் ஞாயிற்றுக்கிழமையன்று "ஆவியோடும் உண்மையோடும்" ஆராதிக்க முடியாது.

(3) நாம் நமது பிள்ளைகளை வளர்த்தல், ஒரு பிரசங்கத்தைத் தயாரித்தல், அன்றாடப் பணியில் ஈடுபடுதல், பக்திவிருத்திக்கான ஒரு பாடத்தை எழுதுதல் அல்லது வேறு எதையாவது செய்தல் போன்ற எதைச் செய்தாலும், நாம் செய்கிற ஒவ்வொரு விஷயத்திலும் தேவனை மகிமைப்படுத்துதலுக்கு உணர்வுப்பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இயேசு, "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்று கூறினார் (மத்தேயு 5:16). பவுல் "... நீங்கள் ... எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" (1 கொரிந்தியர் 10:31) என்று எழுதினார்.

## *உள்ளாக மறுரூபமாகுதல் (12:2)*

***பவுலின் புத்திமதி (வசனம் 2அ, ஆ)***

*2ம் வசனம் [ஆங்கில வேதாகமத்தில்] "And" என்று தொடங்குகிறது, இது இவ்வசனத்தை முந்திய வசனத்துடன் பிணைக்கிறது. பவுல், கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டிருத்தல் என்ற தமது கலந்துரையாடலைத் தொடர்ந்தார். யாரோ ஒருவர், "ஜீவனுள்ள பலி என்பது, அது பீடத்திலிருந்து தவழ்ந்து [விலகிச்] சென்று கொண்டிருக்கிறது என்பதே பிரச்சனையாக உள்ளது" என்று கூறினார்.[19] ஆகவே பவுல் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த வாழ்வுக்கென்று சற்றுமுன் ஏற்படுத்திய வேண்டுகோளுக்கு மறுவலிவூட்டினார்.*

*(1) எதிர்மறை. முதலில் பவுல் ஒரு எதிர்மறையான விளக்கத்தைக் கொடுத்தார்: "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்" (வசனம் 2அ). "ஒத்தவேஷந்தரியாமல்" என்பது suschematizo என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "வடிவம்" என்பதற்கான schema என்பது இந்த நீண்ட வார்த்தையின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது[20]; இதற்கு முன்பாக sun ("உடன்") என்பது வருகிறது. "உலகம்" என்பது "யுகம்" என்பதற்கான aion என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. Aion என்பது (பாறைகள், மரங்கள் மற்றும் மலர்கள் போன்ற) இயற்கையான உலகத்தைக் குறிப்பதில்லை, ஆனால் இது, வேறொரு இடத்தில் பவுல், "இப்பொழுதிருக்கிற … பிரபஞ்சத்தினின்று[aion]" என்று அழைக்கும் விஷயத்தைக் குறிக்கிறது (கலாத்தியர் 1:4).*

*உலகமானது தனது தர அளவைகளுக்கு ஏற்றவர்களாக இருக்கும்படி நம்மீது நிலையான அழுத்தத்தை இடுகிறது.[21] இந்த அழுத்தம் பின்வரும் மக்களிடத்திலிருந்து வரலாம்: நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், அயலகத்தவர்கள், உடன்பணிபுரிபவர்கள் அல்லது பள்ளித் தோழர்கள். இது பின்வருவன போன்ற தொலைத்தொடர்பு சாதனங்களிடத்திலிருந்து வரலாம்: செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், புத்தகங்கள், இசை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள், விளம்பரங்கள், முதலியன. இப்படிப்பட்ட அழுத்தமானது ஒழிந்துபோகாததாகவும் கடுமைகுறையாததாகவும் உள்ளது. இது மிகநுட்பமானதாகவும் இருக்கக் கூடும். தனிப்பட்ட நமது சந்தோஷமே வாழ்வின் இலக்கு - மற்றும் நாம் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்றால், நாம் மற்ற ஒவ்வொருவரையும் போலவே சிந்திக்க, செயல்பட, பேச மற்றும் கண்ணோக்க வேண்டும் - என்று இந்த உலகம் நமது காதுகளில் கிசுகிசுக்கிறது. உலகத்தின் மதிப்பீட்டு முறை மற்றும் வாழ்வுநடை ஆகியவற்றைப் பற்றிப் புரிந்துணர்தல் இன்றியே அவற்றை ஏற்றுக்கொள்ளுதல் சுலபமானதாக உள்ளது. மக்கள் இயல்பாகவே பிறரைப் பார்த்து அதேபோன்று செய்யக்கூடியவர்களாக உள்ளனர், மற்றும் பிறரைப் போலச் செய்வதற்கு மதிப்பீட்டு முறைகளின் இரு அடிப்படை முறைமைகள் மாத்திரமே கிடைப்பவைகளாக உள்ளன. ஒன்று "இந்தப் பொல்லாத பிரபஞ்சத்தினுடையதாக" உள்ளது, இன்னொன்று "தேவனுடைய சித்தத்தில்" காணப்படுகிறது (வசனம் 2ஆ). பவுல், "இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

*ஒருவேளை எச்சரிக்கையின் ஒருவார்த்தை இவ்விடத்தில் அவசியமா*

யிருக்கலாம். "இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்" என்பது, நாம் மாறு பட்டவர்களாயிருக்க வேண்டும் என்பதற்காகவே, மாறுபட்டிருக்க முயற்சி செய்ய வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை. ஹால்ஃபோர்டு லுக்காக் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> மாறுபட்டவர்களாயிருக்க வேண்டும் என்பதற்காக மாத்திரம் ஒத்தவேஷந் தரியாதிருத்தலில் மதிப்பு எதுவும் இருப்பதில்லை. அது பக்குவமற்ற மனநிலையின் அடையாளமாக உள்ளது, அது அடிக்கடி காட்சிப்படுத்தும் ஒருவருடையதாக உள்ளது. வாழ்வின் பல அம்சங்களில் ஒத்த வேஷந்தரித்தல் என்பது செயல்திறன் மிக்க சமூகத்திற்கு அவசியமானதாக உள்ளது.[22]

மேட்டிமையான கண்ணோக்கை மேற்கொண்டு, இயன்ற வரையில் மாறு பாடாகவும் அந்நியமாகவும் செயல்படும் மக்களை நாம் யாவரும் அறிந்திருக் கிறோம். அவ்வகையான நடத்தை, சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல முயற்சிக்கும் நம்மை அந்நியப்படுத்திவிடும். நாம் தேவனுடைய சித்தத்திற்கு நேர்விரோத மாகவுள்ள உலகத்தின் பண்புகளுக்கு ஒத்தவேஷம் தரிக்கக்கூடாது, ஆனால் நாம் யாருக்குப் போதிக்க வேண்டுமோ, அவர்களை எதிர்த்து நிற்கும்படி நமது வழி-யிலிருந்து புறம்பே சென்றுவிடக்கூடாது.

(2) *நேர்மறை.* பவுல் எதிர்மறையுடன் நிறுத்திவிடவில்லை; அவர் ஒரு நேர்மறை யான குறிப்பையும் கூடுதலாகக் கூறினார்: "[ஆனால்] மறுரூபமாகுங்கள்" (வசனம் 2ஈ). "மறுரூபமாகுங்கள்" என்பது, *metamorphoo* என்பதன் மொழிபெயர்ப்பாக உள்ளது. இந்த வார்த்தையின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது *morphe* ("வடிவம்" என்பதற்கான இன்னொரு வார்த்தை) என்பதிலிருந்து வருகிறது, இதற்கு முன் *meta* ("உடன்" என்பதற்கான இன்னொரு வார்த்தை) வருகிறது. இதிலிருந்துதான் நாம் மாற்றத்தை - அடிக்கடி ஒரு உயிர்த்துடிப்புள்ள மாற்றத்தை - குறிக்கிற "metamorphosis" என்ற வார்த்தையைப் பெறுகிறோம்.[23] கூட்டுப்புழு ஒன்று பட்டுப்பூச்சியாக மாறுதல் என்பது அடிக்கடி பயன்படுத்தப்படுகிற ஒரு விவரிப்பாக உள்ளது.[24] அவ்வகையான உடல்ரீதியான உருமாற்றம் குறிப்பிடத் தக்கதாக இருக்கையில், ஒருவர் கிறிஸ்துவுக்குள் வரும்போது சாத்திய மாகிற ஆவிக்குரிய உருமாற்றம் இன்னும் அதிகம் ஆச்சரியமானதாக உள்ளது. பல மாதங்களுக்கு முன்னர், வருடக்கடைசியில் நடைபெற்ற ஆராதனை ஊழியம் ஒன்றின் முடிவில், ஒரு மனிதர் தமது வாழ்வைக் கிறிஸ்து எவ்வாறு மாற்றியிருந்தார் என்று சொல்லிக் கேட்டேன். அவர், "இருபது ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு குடிகாரனாக இருந்தேன்!" என்று கூறினார். இப்போது அந்த மனிதர், கர்த்தருடைய சபையில் உண்மையும் செயல்விளைவுமுள்ள ஒரு மூப்பராக இருக்கிறார்![25]

எனக்குத் தெளிவற்றதாக இருக்கும் சில காரணங்களுக்காக, பல எழுத்தாளர்கள் "மறுரூபமாகுங்கள்" என்பது செயல்பாட்டு வினையில் இருப்ப தாக உரைக்கின்றனர். இது நாம் சில விஷயங்களைச் *செய்தல்* என்பதற்கு மாறாக, நமக்குச் சிலவிஷயங்கள் *செய்யப்படுதல்* என்பதாக இதை ஆக்குகிறது. பல மொழிபெயர்ப்புகளும் பொழிப்புரைகளும், "*தேவன் உங்களை மறுரூபப் படுத்தட்டும்*" அல்லது அதைப்போன்ற வாக்கியத்தைக் கொண்டுள்ளன (TEV; CEV; NLT; Phillips). இது இப்படிப்பட்ட வலியுறுத்தத்தைப் பெறுவது ஏன்

என்பதை நான் அறியவில்லை என்று மீண்டும் கூறுகிறேன். " 'ஒத்தவேஷந்தரித்தல்' மற்றும் "மறுரூபமாகுதல்" என்பவை கிரேக்க மொழியில் ஒரே முடிவைக் கொண்டவைகளாக உள்ளன, ஆனால் எந்த ஒரு விளக்கவுரையாளரும், 'ஒத்தவேஷந்தரித்தல்' என்பது நாம் செய்கிற சிலவிஷயமாக இருப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக நமக்குச் செய்யப்படுகிற சில விஷயமாக உள்ளது" என்று வலியுறுத்தியதாக நான் கண்டதில்லை. இவ்விரு வார்த்தைகளின் முடிவுப்பகுதியும் செயப்பாட்டுவினையாகவோ (நமக்குச் செய்யப்படுகிற சிலவிஷயங்கள்) அல்லது நடுவினையாகவோ (நமக்கு நாமே செய்கிறவை) இருக்க முடியும்.[26] பவுல் இந்தப் பகுதியை "*உங்களை* வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று முடித்தார்; *நாம்* என்ன செய்ய வேண்டும் என்பதன்மீதே வலியுறுத்தம் உள்ளது. இருந்த போதிலும், தேவனுடைய உதவியின்றி நாம் - "ஒத்தவேஷந்தரியாதிருங்கள்" அல்லது "மறுரூபமாகுங்கள்" என்ற - இவ்விரு கட்டளைகளில் ஏதொன்றுக்கும் கீழ்ப்படிய இயலாது என்பதை நினைவில் வைத்துக்கொள்வது முக்கியமானதாக உள்ளது. அதை, 7 மற்றும் 8ம் அதிகாரங்கள் தெளிவாக்குகின்றன. கர்த்தரின்றி நாம் உதவியற்றவர்களாக இருக்கிறோம்.

**பவுலின் பகுப்பாய்வு (வசனம் 2இ, ஈ)**

(1) *எவ்வாறு?* நாம் எவ்வாறு "மறுரூபமாகி" இருக்க முடியும்? பவுல் நமக்குப் பின்வருமாறு கூறினார்: "... உங்கள் மனம் புதிதாகிறதினாலே[*ana* ("மீண்டும்") என்பதால் முன்தொடரப்பட்ட *kainos* ("புதிய") என்பதிலிருந்து]" (வசனம் 2இ). மறுரூபமாகுதல் என்பது *உள்ளிருந்து* வருகிறது. உள்ளான மாற்ற மின்றிப் புறம்பாக மாறுதல் என்பது சேற்றில் விளையாடும் ஒரு பையனுக்குச் சுத்தமான உடைகளை உடுத்துவித்தல் போன்றதாக உள்ளது. புறம்பாக மாற்றம் அடைவதற்கு நாம் முதலில் உள்ளாக மாற்றம் அடைய வேண்டும். ஒரு மனிதனு டைய "இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" (நீதிமொழிகள் 23:7).

ஆக்லஹாமாவின் லோன் உல்ஃப் என்ற இடத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியின் அறிவியல் வகுப்பிலிருந்து வந்த ஒரு எளிய செயல்விளக்கம் என் நினைவுக்கு வருகிறது. ஆசிரியர் ஒரு வெறுமையான, தட்டையான பக்கம் கொண்ட ஒரு கேலன் அளவுடைய உலோகக் கலன் ஒன்றை எடுத்துக்கொண்டார். அவர் அந்தக் கலனின் மூடியை எடுத்துவிட்டு, அதற்குள் சிறிதளவு தண்ணீர் விட்டு, அதை புன்சன் எரிநெருப்பின்மீது வைத்தார். விரைவிலேயே அந்தத் தண்ணீர் கொதித்தது. ஆசிரியர், பாதுகாப்புக் கையுறைகளைப் பயன்படுத்தி, மூடியைத் திரும்ப வைத்து அதை இறுக்கமாக திருகி, கலனை சுவாலையிலிருந்து எடுத்துவிட்டார். ஒருசில கணங்களுக்கு ஒன்றும் நடக்கவில்லை. பின்பு திடீரென்று - மாபெரும், காணப்படாத கைகளால் நசுக்கப்பட்டது போன்று - அந்தக் கலனின் பக்கங்கள் உள்ளாக நசுங்கின. இது எனக்கு மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தியது!

கலனை வெப்பப்படுத்தியது அதனுள் இருந்த காற்றை விரிவாக்கி அக்காற்றின் ஒரு பகுதியை கலனிலிருந்து வெளியே தள்ளியது என்று ஆசிரியர் விளக்கப்படுத்தினார். இதன்விளைவாக, மூடப்பட்ட கலன் குளிரவைக்கப்பட்ட போது, அதனுள்ளிருந்த காற்றழுத்தம் கலனுக்கு வெளியேயுள்ள காற்றழுத்தத்தை விடக் குறைவானதாயிற்று. அதனால்தான், வெளியேயுள்ள காற்றழுத்தம்

அந்தக் கலனின் பக்கங்கள் நசுங்கக் காரணமாயிற்று. நம்மில் பெரும்பான்மை யானவர்கள் காற்றழுத்தம் பற்றி அறிந்திருப்பதும்கூட இல்லை, ஆனால் அது உள்ளது. கடல் மட்டத்தில் காற்றழுத்தமானது ஒரு சதுர அங்குலத்திற்கு பதினைந்து பவுண்டுகளாக உள்ளது![27] (நமது உடலின் உள்ளேயுள்ள அழுத்த மானது வெளியேயுள்ள அழுத்தத்திற்குச் சமமானதாக இருப்பதால், நமது உடல்கள் நசுங்காதிருக்கின்றன.)

பல ஆண்டுகளுக்குப் பின்பு, நான் ரோமர் 12:1, 2ஐப் படித்துக்கொண்டிருக் கையில், எனக்கு காற்றழுத்தம் பற்றிய அந்தச் செயல்விளக்கம் நினைவுக்கு வந்தது. நான், "மக்களில் பலர் உலகம் தனது வாழ்வுநடைக்கு ஏற்றவகையில் இருக்கும்படி [நம்மீது செயல்படுத்தும்] அழுத்தத்தை அறியாதிருக்கின்றனர். அவர்கள் நிலைநிற்கக்கூடிய வகையில் இருக்க *உள்ளாக ஒன்றும் இல்லாத* காரணத்தினால், அந்த [புறம்பான] அழுத்தத்திற்கு அவர்கள் இணங்கிப் போகின்றனர்" என்று நினைத்தேன். செயல்விளைவில் பவுல், உலகமானது "தனது அச்சிற்குள் நம்மைப் பிழியும்" அதன் அழுத்தத்திலிருந்து நம்மைக் காத்துக் கொள்வதற்கு, புதிதாக்கப்பட்ட மனதுடன் ஒரு [உள்ளான] அழுத்தத்தை அமைத்துக்கொள்வதே வழியாக உள்ளது என்று கூறினார்.

நமது மனங்களைப் புதிதாக்குவதற்கு (தேவனுடைய உதவியுடன்) நாம் என்ன செய்ய முடியும்? நம்மைக் கீழே இழுக்கும் விஷயங்களுக்குப் பதிலாக, நம்மை மேலே உயர்த்தும் விஷயங்களை நமது மனங்களில் நிரப்புதல் என்பதே நாம் மேற்கொள்ள வேண்டிய மிக முக்கியமான நடவடிக்கையாக இருக்கலாம். நமது மனங்கள் தொடர்ந்து, ஒழுக்கமற்ற, பயபக்தியற்ற மற்றும் சுய மையங்கொண்ட உலகத்தின் செல்வாக்குகளுக்கு ஆட்பட்டிருந்தால், நமது மனங்களைப் புதுப்பித்தல் என்பது ஏறக்குறைய இயலாத விஷயமாகவே ஆகிவிடும். வேறொரு இடத்தில் பவுல், "... உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவை களெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெ வைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ *அவைகளையே* சிந்தித்துக் கொண்டிருங்கள்" என்று எழுதினார் (பிலிப்பியர் 4:8; என்னால் வலியுறுத்தப் படுகிறது).

நாம் தேவனுடைய வசனங்களைக் கொண்டு நமது மனங்களை நிரப்புதல் அவசியமாக உள்ளது; இதை நாம் வேதாகமத்தை வாசித்தல் மற்றும் படித்தல் ஆகியவற்றின் மூலமாகச் செய்கிறோம்.[28] நமது சிந்தனைகள் தேவன்மீது கவனம் குவிப்பவையாக இருக்க வேண்டும்; இதை நாம் தியானித்தல் மற்றும் ஜெபம், மற்றும் தேவன் படைத்துள்ள ஆச்சரியமான இவ்வுலகம் பற்றி ஆழ்ந்து சிந்தித்தல் ஆகியவற்றின் மூலமாகச் சாதிக்க முடியும் (காண்க ரோமர் 1:20). தங்கள் வாழ்வில் ஆவிக்குரிய வலியுறுத்தம் கொண்ட மக்களுடன் நாம் இணைவுகொள்வது அவசியம்; இதை நாம் கிறிஸ்தவ ஐக்கியம் மற்றும் ஆராதனை மூலம் செய்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் நமது கண்களை இயேசுவின்மீது வைத்து அவரைப் போலிருக்கக் கடினமுயற்சி மேற்கொள்ள வேண்டும். "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையை கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரிந்தியர் 3:18). இவ்வாறு, உள்ளான மனுஷன் "நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது"

(2 கொரிந்தியர் 4:16). நாம் புறம்பாகவும் (சரீரத்திலும்) உள்ளாகவும் (மனதிலும்) மாற்றப்பட்டிருப்போம்.

(2) *எதற்காக?* நமது மனங்கள் புதிதாக்கப்படுதல் என்பது எதற்காக முக்கியமானதாக உள்ளது? 2ம் வசனத்தின் முடிவில் பவுல் ஒரு (அல்லது ஒருவேளை பல) காரணங்களைக் கொடுத்தார்: "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம்[29] இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக" (ரோமர் 12:2ஆ). "நன்மை" (*agathos*) பிரியம் (*euarestos*; "well pleasing" "நன்கு பிரியப்படுத்துதல்") மற்றும் "பரிபூரணமான" (*teleios*; "complete, mature" "முழுமையான, பக்குவமான") என்பவை யாவும் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்புடைய விவரிப்புகளாக உள்ளன. "பகுத்தறிய" (*dokimazo*) என்பதே இவ்வேத வசனத்தில் நமது சிந்தித்தலுக்கு அறைகூவல் விடுக்கும் சொற்றொடராக உள்ளது.

*Dokimzazo* என்பது உலோகத்தைச் சோதிக்கப் பயன்படுத்தப்பட்டது. இது "நிரூபிக்க,"[30] "சோதிக்க" மற்றும் (வெற்றிகரமான சோதனையின் விளைவாக) "அங்கீகரிக்க" என்றுகூட அர்த்தப்பட்டது. NIV வேதாகமம் தனது மொழிபெயர்ப்பில் இந்த எல்லாக் கருத்துக்களையும் உள்ளடக்குகிறது: "Then you will be able to *test and approve* what God's will is" ["பின்பு நீங்கள் தேவனுடைய சித்தம் இன்னதென்று *சோதித்து அங்கீகரிக்கக்* கூடியவர்களாயிருப்பீர்கள்"] (என்னால் வலியுறுத்தப்படுகிறது). 2ம் வசனத்தில் பவுல், *dokimazo* என்ற வார்த்தையைப் பயன்படுத்துகையில் அவரது முதன்மைச் சிந்தனையாக இருந்தது எது? என்பதே கேள்வியாக உள்ளது.

எந்த சூழ்நிலையிலும் தேவனுடைய சித்தம் என்னவாக உள்ளது என்று *அறியக்கூடிய நிலையில்* நாம் இருத்தல் என்பதையே பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று பல எழுத்தாளர்கள் நினைக்கின்றனர். மெக்கார்டு வேதாகமத்தில், "that you may discover God's good and acceptable and complete will" ["... நீங்கள் தேவனுடைய நன்மையும் பிரியமும் மற்றும் முழுமையான சித்தம் இன்னதென்று கண்டுபிடிக்கத்தக்கதாக"] என்றுள்ளது. JB வேதாகமத்தில், "This is the only way to discover the will of God and know what is good, what it is that God wants, what is the perfect thing to do" ["தேவனுடைய சித்தம் இன்னதென்றும், நன்மையானது என்ன, தேவன் விரும்புகிறது என்ன, செய்வதற்குப் பூரணமான விஷயம் என்ன என்பவற்றைக் கண்டறிவதற்கு இது ஒன்றே வழியாக உள்ளது"] என்றுள்ளது. மனதைப் புதிதாக்குவதற்கென்று ஆலோசனையாகத் தெரிவிக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய பயிற்சிகள், தேவனுடைய சித்தம் பற்றிய அறிவையும், கொடுக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பது பற்றிய ஆவிக்குரிய பகுத்துணர்தலையும் நமக்குத் தரும்.

மற்ற எழுத்தாளர்கள் "சோதித்தல்" அல்லது "நிரூபித்தல்" என்ற கருத்தின் மீது அதிக வலியுறுத்தத்தை இடுகின்றனர். வில்லியம் பார்க்ளே என்பவர், "உங்கள் சொந்த வாழ்வில், நீங்கள் தேவனுடைய சித்தம் நன்மையானதென்றும் நன்கு பிரியப்படுத்துவதென்றும் பூரணமானதென்றும் நிரூபிப்பீர்கள்" என்று கூறினார். *உங்களுக்கு நீங்களே* அதை நிரூபிப்பீர்கள், நீங்கள், "ஆம், தேவனுடைய சித்தம் நன்மையானது என்று நான் தைரியமாயிருக்கிறேன்" என்று கூறக்கூடியவர்களாக இருப்பீர்கள். பின்பு நீங்கள் உங்கள் வாழ்வில் தேவனுடைய சித்தத்தைச் செயல்விளக்கப்படுத்துகையில், நீங்கள் அது நன்மையானது

என்று *மற்றவர்களுக்கும்* நிரூபிப்பீர்கள்.

## முடிவுரை

நீங்கள் மறுரூபமான வாழ்வை வாழ்கிறீர்களா? மறுரூபமாகுதல் என்பதில் *மாற்றம்* என்பது உள்ளது, மற்றும் மாற்றம் என்பது சுலபமானதல்ல. வாழ்நாளில் நீண்டகாலமாகப் பழகி ஆழமான, ஆழமான படுகுழியாக உள்ளவற்றிலிருந்து எழுதல் என்பது கடினமானதாக உள்ளது - ஆனால் தேவனுடைய உதவியுடன் நாம் மாற *முடியும்*. அவர்மீது சார்ந்திருந்து நாம் பவுலின் அறைகூவலை நிறைவேற்ற முடியும்:

> ... நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்தவேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

மனம்வருந்திய விசுவாசி என்ற வகையில் நீங்கள் ஞானஸ்நானம் பெற்று "*புதிதான* ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு" எழும்புகையில் (ரோமர் 6:4; என்னால் வலியுறுத்தப்படுகிறது), மறுரூபமாகுதல் தொடங்குகிறது. பின்பு அது நீங்கள் உங்கள் மனதை "மாம்சத்துக்கு உரியவற்றில்" இருந்து திருப்பி, "ஆவிக்குரியவற்றில்" (8:5) கவனம் குவிக்கத் திருப்புகையில் தொடருகிறது. நாம் இந்தப் பாடத்தை முடிக்கும் இவ்வேளையில், உங்களை ஒரு கேள்வி கேட்க என்னை அனுமதியுங்கள்: "உங்கள் வாழ்வில் கிறிஸ்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறாரா?"[31] இல்லையென்றால் இன்றே நீங்கள் விஷயங்களை அவருடன் சரிப்படுத்திக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

ரிச்சர்டு ரோஜர்ஸ் என்பவர், ரோமர் 12:1, 2க்கான தமது விளக்கங்களுக்குப் பின்வரும் தலைப்பைப் பயன்படுத்தினார்: "கிறிஸ்தவ வாழ்விற்கான அஸ்திபாரம்." இந்த இரு வசனங்களும் ரோமருக்கு எழுதிய நிருபத்தின் "கடைசிப் பகுதியில் பவுல் கூறவிருந்த ஒவ்வொன்றிற்கும் அஸ்திபாரத்தை வடிவமைக்கின்றன" என்று அவர் கூறினார்.[32]

பிரென்ட்டிஸ் மெடோர் என்பவர், நமது வசனப்பகுதியைப் பிரசங்கித்தபோது, 3ம் வசனத்தை உள்ளடக்கி, "மாற்றத்திற்கான படிகள்" நான்கைக் குறிப்பிட்டார்: (1) பரிசுத்தமாகுதல் (வசனம் 1), (2) வேறுபடுத்துதல் (வசனம் 2அ), (3) மறுரூபமாகுதல் (வசனம் 2ஆ) மற்றும் (4) மதிப்பீடு செய்தல் (வசனம் 3).[33]

நமது வேதபாட வசனப்பகுதியின் கூறுகள், வசனரீதியான அல்லது தலைப்பு ரீதியான பாடங்களுக்குப் பயன்படுத்தப்பட முடியும். எடுத்துக்காட்டாக,

நமது சரீரங்களை ஆவிக்குரிய பலியாக ஒப்புக்கொடுத்தலின் கருத்தைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். பழைய ஏற்பாடு, பரிகாரம் செய்வதற்கு, லேவியராகமம் 4; 5ன் பாவநிவாரண பலிகளையும் குற்றநிவாரண பலிகளையும் கேட்டது. சிலுவையில் இயேசுவின் தியாகப்பலி இவைகளை ஈடு செய்தது. அத்துடன் கூடுதலாக, நன்றிசெலுத்துதலுக்கு (மற்றவற்றுடன்கூட) உற்சாகபலிகளும் தர வேண்டியதாயிருந்தது: லேவியராகமம் 1-3ன் தகனபலிகள், தானிய பலிகள் மற்றும் சமாதான பலிகள். இவை யாவற்றையும் புதிய ஏற்பாடானது, நமது இருப்பு, நாம் கொண்டுள்ள யாவும் மற்றும் நாம் செய்கிற யாவும் என்ற நமது ஜீவபலியுடன் சமானமாக்குகிறது.

ரோமர் 12ஐ மத்தேயு 5-7 உடன் ஒப்பிடுதல் என்பது மாறுபட்ட ஒரு அணுகு முறையாக உள்ளது. வில்லியம் பார்க்ளே என்பவர், "*ரோமருக்கு எழுதிய நிருபத்தின்* பன்னிரெண்டாம் அதிகாரமானது, மலைப்பிரசங்கத்துடன் எப்போதும் வைக்கப்பட வேண்டியதாக உள்ள ஒழுக்கரீதியான மாபெரும் கூற்றாக உள்ளது" என்று கூறினார்.[34] நீங்கள் உங்கள் எடுத்துரைப்பை, "இயேசு, பவுல், மற்றும் நீங்கள்" என்று அழைக்க முடியும்.

---

குறிப்புகள்

[1]John R. W. Stott, *The Message of Romans*: *God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 317. [2]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 553. [3]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 133. [4]J.D. Thomas, Class Notes, *Romans,* Abilene Christian College (1955). [5]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 62. [6]Dale Hartman, sermon preached at Eastside church of Christ, Midwest City, Oklahoma, c. 2004. [7]சில மொழிபெயர்ப்புகளில் "mercy" என்று (ஒருமையில்) உள்ளது, ஆனால் இவ்வார்த்தை கிரேக்க வசனத்தில் பன்மையிலேயே உள்ளது. [8]இது "இரக்கங்கள்" (*eleos* என்பதிலிருந்து வருவது) என்பதற்கான வழக்கமான வார்த்தையாக இருப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக இது "compassion" ["பரிவிரக்கம்"] என்பதற்கான கிரேக்க வார்த்தையாக உள்ளது. "இரக்கம்" மற்றும் "பரிவிரக்கம்" என்பவை சிலவேளைகளில் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன (காண்க ரோமர் 9:15). [9]"ஜீவ" என்பது, கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வகையில் உயிருள்ளவர்களாக இருக்கின்றனர் என்ற உண்மையைக் குறிப்பதாகச் சில எழுத்தாளர்கள் நினைக்கின்றனர். ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து, நாம் "புதிய ஜீவனுள்ளவர்களாக" உயிர்ப்பிக்கப்படுகிறோம் (ரோமர் 6:4). [10]F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 212.

[11]Marvin R. Vincent, *Word Studies in the New Testament,* vol. 3, *The Epistles of Paul* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co.) 153. [12]Thomas. [13]William Barclay, *The Letter to the Romans,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 156. [14]இந்தப் பாடத்தை நீங்கள் ஒரு வகுப்பில் பயன்படுத்தினால், நீங்கள் இவ்விடத்தில் நிறுத்தி இந்தக் கேள்வியைக் கலந்துரையாடலாம். ஒருவேளைக்கு ஒன்றாக மாம்ச உடலின் உறுப்புக்கள் சிலவற்றை (கரங்கள், கால்கள், கைகள் போன்றவற்றை) குறிப்பிட்டு ஒவ்வொன்றைப் பற்றியும், "மாம்சப்பிரகாரமான உடலின் இந்த உறுப்பு தேவனுடைய ஊழியத்தில் எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும்?" என்று கேள்வி கேளுங்கள். [15]Stott, 322. [16]Vine, 509. [17]Barclay, 156-57. [18]*Latreia* என்பது "ஆராதனை"

*என்பதற்கான புதிய ஏற்பாட்டு முதன்மை வார்த்தைகளில் ஒன்றல்ல ஆனால் அது இவ்வார்த்தையின் அர்த்தத்திலிருந்து ஆராதனை விலக்கப்பட்டுள்ளது என்று அர்த்தப்படுவதில்லை.* [19]Anonymous; quoted in Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans,* Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 232. [20]*பவுல், ரோமர் 12:2ல் "வடிவம்" என்பதற்கு மாறுபட்ட இரு வார்த்தைகளைப் பயன் படுத்தினார்: "ஒத்த வேஷந்தரியாமல்" என்பதில் schema என்பதையும் "மறுரூபமாகுங்கள்" என்பதில் morphe என்பதையும் அவர் பயன்படுத்தினார்.*

[21]*இந்தப் பத்தியை நீங்கள் வாழும் சமூகத்திற்குப் பொருத்தமாகும்படி தழுவியமைத்துக் கொள்ளவும்.* [22]Halford E. Luccock, *Preaching Values in the Epistles of Paul,* vol. 1, *Romans and First Corinthians* (New York: Harper & Brothers, 1959), 77. [23]*Metamorphoo என்பதன் ஒரு வடிமானது மத்தேயு 17:2 மற்றும் மாற்கு 9:2 ஆகிய வசனங்களில் ''மறுரூபமாகுதல்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் மாம் சத்தின் மூலமாக அவரது தெய்வீகத்துவத்தின் மகிமை பிரகாசித்தபோது அவரது தோற்றம் பெருமளவு மாறிற்று.* [24]*உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் - ஒரு தலைப்பிரட்டையானது தவளையாக மாறுதல் அல்லது இன்னொரு இயல்பான உருமாற்றம் போன்ற - பழக்கமான ஒரு விவரிப்பைப் பயன்படுத்துங்கள்.* [25]*உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான உதாரணங்களைக் கொடுக்க உங்களால் முடியலாம், ஆனால் எவரரொருவரையும் சங்கடப்படுத்தும் உதாரணத்தைத் தருவதைத் தவிர்ப்பதில் நிச்சயமாயிருங்கள்.* [26]*ஆங்கிலத்தில் இருவினைகள் மாத்திரமே உள்ளன: செய்வினை (நாம் செய்கிறவை) மற்றும் செயப்பாட்டு வினை (நமக்குச் செய்யப்படுபவை). கிரேக்க மொழி, மூன்றாவது வினையொன்றைக் கொண்டுள்ளது: நடுவினை (நமக்கு நாமே செய்கிறவை).* [27]University of Illinois, Urbana-Champaign, "Atmospheric Pressure" (http:/ / www.2010.atmos.uiuc.edu / (GH) / guides / mtr / fw / prs / def.rxml; Internet; accessed 10 May 2006). [28]*இப்போது நாம் பதினோரு அதிகாரங்களில், மனதை "புதிதாக்குதல்" என்பதற்கான பவுலின் அறிவுறுத்துதல்களைப் படித்திருக்கிறோம்.* [29]"Is"*என்ற வார்த்தை மூலவசனத்தில் காணப்படுவதில்லை, இது மொழிபெயர்ப்பாளர்களால் தரப்பட்டிருக்கிறது.* [30]Vine, 35.

[31]Jimmy Allen, *Survey of Romans,* 4th ed., rev. (Searcy, Ark.: By the author, 1973), 103. [32]Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 167. [33]Prentice Meador, sermon preached at Preston Road church of Christ, Dallas, Texas, n.d., cassette. [34]Barclay, 6.